# மூலிகை வளர்ப்போம் பயன் பெறுவோம்



# வில்வம்

**தாவரவியல் பெயர்:** *Aegle marvelous L*
**குடும்பம்** : RUTACEAE
**சிங்களம்** : பெபலி
**சமஸ்கிருதம்** : பிbல்வ
**தமிழ்** : வில்வம்
**ஆங்கிலம்** : Bael fruit
**பரம்பல்** : வித்து, தண்டு, வேர்
**மருந்துக்காக பயன்படும் பகுதிகள்:**
பட்டை,பூ,இலை,காய்,வேர்

**தாவரவியல் விளக்கம்**
10 மீட்டர் உயரம் வரை வளரும் இலையுதிர் செடி. முதிர்ந்த கிளைகளில் முட்கள் காணப்படும்.

பூக்கள் பச்சை-வெள்ளை நிறத்திலும், பழங்கள் ஒரு கோள ஓட்டால் சூழப்பட்டு, உள்ளே சதை காணப்படும்.

சராசரி ஆண்டு மழைவீழ்ச்சி 570-2000மிமீ மற்றும் 1200 மீட்டர் வரை மலைகள் மற்றும் சமநிலைகளில்,வறண்ட மற்றும் திறந்த காடுகளில் எளிதில் வளரும். மிகவும் வறண்ட காலநிலையிலும் வளர்க்கலாம்.

**உணவு** - மிகவும் சுவையானது மற்றும் சத்தான ஒரு பழம்.இதில் நிறைய புரதம், கார்போஹைட்ரேட், கொழுப்பு, கால்சியம், பாஸ்பரஸ் மற்றும் வைட்டமின் சி உள்ளது. பொதுவாக மலச்சிக்கல், அஜீரணம், வாந்தி, கண் நோய்கள், வாத நோய்கள் மற்றும் இதய நோய்களுக்கு பயன் படுத்தப்படுகிறது.

**கை மருந்தாக -**
*நீரிழிவு - இலைகளைக் கொதிக்க வைத்த தண்ணீர்.
*சிறுநீரக நோய் - பூக்கள் மற்றும் பழம் அவித்த நீர்.
*கிருமிகளை அகற்ற- வில்வ வேர்,இலை,ஒடு எரித்து புகை பிடித்தல்.
*அஜீரணம்- பழுத்த வில்வம் பழத்தைஅடிக்கடி சாப்பிடுவது.

**விவசாய விளக்கம்**
பழுத்த பழங்களிலிருந்து விதைகளைப் பிரித்து, அவற்றைக் கழுவி, மணல் நாற்றங்காலில் நடவு செய்த பிறகு, 8-10 நாட்களில் முளைக்கத் தொடங்குகிறது.

மணல் நாற்றங்காலில் 2-3 நாற்றுகள் வரை வளர்ந்த பிறகு, 1: 1: 1 என்ற விகிதத்தில் மண்: மணல்: சாணம் சேர்த்து நிரப்ப வேண்டும். மற்றும் 6-12 மாதங்களுக்குப் பிறகு அவற்றை வயலில் நடவு செய்ய வேண்டும்.

நாற்றுகளை நடும் போது 6x6 மீட்டர் இடைவெளியும், ஒட்டுத்தாவரம் நடும் போது 3x3 மீட்டர் இடைவெளியும் வைத்திருப்பது நல்லது.

ஒரு விதை செடியிலிருந்து 7-9 வருடங்களிலும், ஒட்டுத்தாவர செடியிலிருந்து 3-4 வருடங்களிலும் பூக்கும்.

**அறுவடை மற்றும் சேமிப்பு**
ஒரு நாற்று 7-9 ஆண்டுகள் எடுக்கும் மற்றும் ஒரு ஒட்டுத்தாவரம் 3-4 ஆண்டுகளிலும் பூக்கும். அறுவடைக்குப் பிறகு காய்கள் பழுக்காததால், முழுமையாக பழுத்த பிறகு அறுவடை செய்ய வேண்டும்.

ஆக்கம்:

வைத்தியர் சமில வீரசிங்க
ஆயுர்வேத சமூக சுகாதார வைத்திய அதிகாரி-பாத்ததும்பர

தமிழாக்கம்:
வைத்தியர் எம்.எஸ்.எப்f. ஷப்fரா,
ஆயுர்வேத சமூக சுகாதார வைத்திய அதிகாரி-நாஉல.